உ

புதிய பிளேட் விகட ரத்தினங்கள்

T. R. கார்மேகம் ஆசாரி,
K. K. தங்கவேலுப் பிள்ளை,
மதுரை பபூன் ஷண்முகம்

இவர்கள் பாடிவரும்

புதிய பிளேட்

# பபூன் பாட்டு.

முதற் பாகம்



ரிஜிஸ்டர் காப்பிரைட்-1931

இதன் விலை அணா-2.

...யம், புத்தக வியாபாரம்,
...யுடு அவர்களால்.
... டைட்டில்பேஜ் மட்டும்
...கப்பெற்றது.

13 OCT 1931

NR4
N317
125528

13 OCT 1931

உ

புதிய பிளேட் விகட ரெத்தினங்கள்

**T. R. கார்மேகம் ஆசாரி,**

**K. K. தங்கவேலுப் பிள்ளை,**

மதுரை பபூன் ஷண்முகம்

இவர்கள் பாடிவருகிற

கிராம்போன் புதிய பிளேட்

# பபூன் பாட்டு.

முதற்பாகம்.







மதுரை புதுமண்டபம் புஸ்தகவியாபாரம்

**S. வீராசாமிநாயுடு அவர்களால்**

மதுரை ராஜா பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது.

காபிரைட்] 1931. [விலை அணா 2

மதுரை பபூன் ஷண்முகம்

K. K. தங்கவேலுபிள்ளை,

T. R. கார்மேகம் ஆசாரி,

## இவர்கள் பிளேட்டில் பாடிவருகிற

## கிராம்போன்

## புதிய பிளேட் பபூன் பாட்டு.

**2-ம்** பாகம்

அவசியம் வாங்கிப்பாருங்கள்.

உ

# புதிய பிளேட் பலூன் பாட்டு.

## முதற்பாகம்.

பிளேட் நிர். G. T. 8.

1. பரமசிவம் என்னவரம் வேணுமென்று
கேட்டாராம் கைலை (பர)
கேட்டாராம் அவர் கேட்டாராம் அவர்கேட்டாராம
அவர் கேட்டாராம் (பர)

2. அவர் அரைப்பலம் கஞ்சா வேணுமென்று
சொன்னாரும் சொன்னாரும்
ஓ கணேசா ஓ கணேசா ஜினுக் ஜினுக் ஜினுக் (பர)

3. பரமசிவம் என்னவரம் வேணுமென்று கேட்டாராம்
கேட்டாராம் அவர்கேட்டாராம் அவர்கேட்டாராம் அவர்
கேட்டாராம்
அவர் அரைப்பலம் கஞ்சா வேணுமென்று சொன்னாரும்
சம்போ சம்போ சபக்பல் சம்போ சம்போ சம்போ (பர)

4. கைலைராஜா அந்த பரமசிவம் என்னவரம் வேணுமென்று
கேட்டாராம்
ஓ கணேசா ஓ கணேசா (பர)

## பிளேட் நிர். 577.

### செஞ்சுருட்டி.

1. வாங்க வாங்கடி லவண்டிகளா
அந்த வாத்தியார் சட்டாம்பிள்ளையை கண்டிங்களா
வாங்க வாங்க வாங்கடி லவண்டிகளா
அந்த வாத்தியார் சட்டாம்பிள்ளையை கண்டிங்களா

2. போங்க போங்களடி பெண்டுகளா அய்யோ
ஒரு புருஷனுக்கு ஆசைப்பட்டு நின்றிங்களா
போங்க போங்க போங்களடி பெண்டுகளா
ஒரு புருஷனுக்கு ஆசைப்பட்டு நின்றிங்களா

3. அடி புத்திகெட்டு தானே நீங்க புறப்படுவதேனோ
நித்தியமும் தானே நிலை குலைந்து மானே
நீலபிரக்கயிலே
சிதம்பரம்
அடி சிதம்பரம் காலையிலே
சிங்காரம் காணுதடி உங்களுக்கு
ஜீவனங் கிருக்குதடி
சிங்காரம் காணுதடி ஜீவனங்கிருக்குதடி

4. செல்லு செல்லு திருச்சிநகர் செல்லு
செல்லு செல்லு திருச்சிநகர் செல்லு

நீ—திருவாரூரு செல்லு திருவாரூரு செல்லு
திருமதுரை செல்லு திருமதுரை செல்லு
சிரிப்பதெல்லாம் பல்லு

மை ஜீனி பட்டா ஜில்லு
ஜில்லு ஜில்லு ஜில்லு.

---

பிளேட் நிர். 578.

தெம்மாங்கு,

அடி மானுருட்டும் கண்ணழகி அடி அடி அடி அடியே
என் மணக்கட்டு பெண்ணழகி அடி அடி அடி அடி (அ)

அடி தேனருந்தும் தினையழகி அடி தேனருந்தும் தினையழகி
தினையழகி
உங்கள் சேதியெல்லாம் தெரியுமடி தெரியுமடி தெரியுமடி (அ)

பாட்டு.

அடி சிமிட்டு குட்டிகளா நீங்கள் சீமையை விட்டிங்களா
அடி அமட்டு குட்டிகளா ஊரில் அலைபப் போரிங்களா
அடி சிமிட்டு குட்டிகளா உங்கள் சீமையை விட்டிங்களா
அடி அமட்டு காரிகளா நீங்கள் அலையப் போரிங்களா

தெம்மாங்கு.

கையோடு கைசேர்த்து அட ட ட ட ட ட ட என்சாமி
இந்த காளைமாடு ரெண்டும் நான் சேர்த்து

டுன் டுன் டுன் டுன் டுன் டுன் டுன் டுண்டு
அடி கையோடு கைகோர்த்து காலைமாடு ரெண்டும சேர்த்து
அடி அடி அடி அடி அடி.

பாட்டு.

பைய பைய நடந்து வாடி பசப்புக்கார தளிக்கிணை
வடமதுரையடி
பெண்ணே பயப்படாதடி
இங்கு வலவிருக்குதடி
பின்னே வாங்கடி ஓடி
வலவிருக்குதடி
பின்னே வாங்கடி ஓடி (அ)

பவூன் நோட்.

தாரந்நாரந்நன்னு தந்நாரந்நன்னுநன்னு
தாரந்நாரந்நன்னு தந்தாரந்நன்னுநன்னு

ஆரம்மா வண்டியிலே மல்லிகைப்பூ கொண்டையிலே
நானும் வாரேனண்டையிலே மயிரிருக்குது மண்டையிலே
ஆ டேம் பகர் வண்டிக்காரா நீயுமிந்த வேளையிலே
தட்டி ஓட்ரா குதிரையை தப்பாமல் சவுக்காலே
இதோ போகுது போகுது வண்டி இந்த வண்டிக்காரன்
நொண்டி
அவன் கைரெண்டோ நொண்டி எப்படி ஓட்டுவாண்டி
யாரய்யா கடையிலே ஏனய்யா பேசலே
போடய்யா ரெண்டரே பூபோட்ட கிளாசிலே

பிளேட் நிர். 2868.

படமுடியாது இனித்துயரம்
இனித்துயரம் இனித்துயரம்
இனித்துயரம் இனித்துயரம்
துயரம் துயரம் துயரம் துயரம் நான்
படமுடியாது அரசே
அரசே அரசே என் அரசே
நான் பட முடியாது அரசே
இந்தப்படி அரிசி விலை
ஏறிவிட்டது ஏறிவிட்டது
ஏறிவிட்டது ஏறிவிட்டது
இரங்கவில்லையே இனி இரங்கவில்லையே
என்ன செய்வேன் ஐயோ
இரங்கவில்லையே
அரிசியின் விலை இன்னம்
இரங்கவில்லையே படி
அரிசி விலை ஏறிவிட்ட படியால் இந்த
ஷண்முகம் சாரீரம் பாடமுடியாது
படமுடியாது இனித்துயரம்
இனித்துயரம் இனித்துயரம்

படமுடியாது பாடமுடியாது
தோம்தரநம் தோம்தரநம்
தோம்தரநம் தோம்தரநம்
தோம்தர தோம்தர தோம்தர தோம்தர
தோம் தோம் தோம் தோம்
தரநம் தரநம் தரநம்
தரநம் தரநம் தரநம்

படமுடியாது அரசே என்
பெண்டாட்டி யிடம்
படமுடியாது இனி
படமுடியாது நான்
தொடமுடியாது எனக்கு
பெண்டாட்டி யானவளும்
பெண்டாட்டி யானவளும்
திண்டாடச் செய்தனளே திண்டாடச் செய்தனளே
தோம்த தோம்த தோம்த தோம்
தோம் தோம் தோம் தோம்

டங் டங் டிங் டிங்
டொங் டொங் ஜிங் ஜிங்
தளாங் தளாங் தத்தளாங்

---

• •

பிளேட் நிர். 3071

(1) ஜப்பான் ஜிண்டான் தப்பா துண்டால்
அடியென் கண்ணே
ஜப்பான் ஜிண்டான் தப்பா துண்டால்
நமக்கு தாழ்வுடன் வாழ்வு போகுமோ (ஜ)

(2) உள்ளூரு மருந்திலேயோ உங்களுக்கு பொருந்தலேயோ
உள்ளூரு மருந்திலேயோ உங்களுக்கு பொருந்தலேயோ
உள்ளூரு மருந்திலேயோ
உங்களுக்கு பொருந்தலேயோ
கொண்டமனைவி அண்டையிலிருக்க
கெண்டையில் தண்ணியில் பெண்களை பார்க்க (ஜ)
அந்த சோப்பு சோடா காப்பி ஜாடாய்
துலைக்கனும் யாவும் விலக்கனும் (சோ)

(3) முன்னாளில் குளிக்கலேயோ நம் ஆயுள் வளுக்கலேயோ
முன்னாளில் குளிக்கலேயோ
நம்மாயுள் வளுக்கலேயோ
அன்னிய பண்டத்தை கொள்ளவும் வேணுமோ
நம் நாட்டு ஜாமானை தள்ளவும் வேணுமோ (ஜ)
தொகையரா
டாய்லட் பெஷ்டு பவுடர்
சற்றுடனே கொர்ஜிப்பவர்
டங் டங் டங் டிங் டிங் டிங்

2 I

அந்த பாதி மீசை மீதிலாசை
பற்றுமோ மனம் கேட்குமோ (ஜ)

(4) அவமானம் இளைப்படவோ வெகுமானம் தலைப்படவோ
அவமானம் இளைப்படவோ வெகுமானம் தலைப்படவோ
இப்புவி மீதினில் இப்பாத கண்டம்
ஒப்பிய நாக ரீகத்தையும் போக்கவோ (ஜ)

---

## பிளேட் நிர். 4476.

### பல்லவி.

நெல்லுகுத்தர பெண்ணே
சொல்லைக் கேளடி கண்ணே (நெ)

### அநுபல்லவி.

தொல்லை வராது முன்னே
தோண்டிக்கொட்டு சொன்னேன் (நெ)

### சரணங்கள்.

1. வலிய நெல்லை நீ குத்தி
வருத்தப்படுவ தேண்டி
சுலபமாயொரு சேதி
சொல்வேன் கேளடி நத்தி (நெ)

2. என்ன சொல்லுவாய் மாமா
சின்ன சிறுக்கியை சொல்லலையே
என்னை நினைக்கப் போமோ
உன் கதி யிப்படி யாமோ (நெ)

3. என்ன சொல்வேண்டி குட்டி
உனக்கு தாலி நான் கட்டி
நண்ணுயிருக்க வேண்டி
நயமாய் சொல்லு ரேண்டி (நெ)

---

பிளேட் நிர். G. T. 9.

(1) கண்ணுட்டி என் கட்டழகி காதல் தீரடி
அடி என் கண்ணுட்டி என் கருத்து மாருதடி
இது காலம நிலாக் காலம்
என் கருத்துக் கனுகூலம் (க)

(2) நீ நினைக்கிற நினைப்புகிது நேரமல்லவே
ராஜா நேரமல்லவே மச்சா நேரமல்லவே
இந்த நிலாக்காலம போகட்டும்
புத்தி சமாதான மாகட்டும் (க)

(3) அடி நங்கேயே நீ வாராயா ஒரு நல்லமுத்தம் தாராயா
நல்லமுத்தம் தாராயா (க)

(4) நாள் கிழமை நக்ஷத்திரம் பார்க்க வேண்டாமா
குறி கேட்க வேண்டாமா பணம் சேர்க்கவேண்டாமா (நீ)

(5) அடி நாள் கிழமை நக்ஷத்திரம் பார்த்து வந்தேண்டி
குறி கேட்டுவந்தேண்டி பணம் சேர்த்துவந்தேண்டி (க)
நங்கையே நீ வாராயா ஒரு நல்ல முத்தம் தாராயா
நல்லமுத்தம் தாராயா

---

பிளேட் நெ. 4364

கல்லு வெள்ளி மோதிரம்
ஏ குள்ளத்தாரா ஓ குள்ளத்தாரா
கடுக்கன் வெள்ளி மோதிரமாம்
ஏகுள்ளத்தாரா
டீ குலிக்கி தில்லாலே
நீ முன்னாலே நான் பின்னாலே
தில்லாலே தில்லாலே தில்லாலே தில்லாலே
கடுக்கன் வெள்ளி மோதிரமாம்
ஏ குள்ளத் தாரா
சித்தி விநாயகனே
ஏ குள்ளத்தாரா ஓ குள்ளத்தாரா
சிந்தைதனிலே வசிப்பாய்
ஏ குள்ளத்தாரா

• •

டி குலுக்கி தில்லாலே
நீ முன்னாலே நான் பின்னாலே
தில்லாலே தில்லாலே தில்லாலே தில்லாலே
சிந்தை தனில் வசிப்பாய்
ஏ குள்ளத்தாரா
வேலனைப் போற்றிடுவாய்
ஏ குள்ளத்தாரா ஓ குள்ளத்தாரா
நினைப்பவரைக் கார்த்திடுவாய்
ஏ குள்ளத்தாரா
டி குலுக்கி தில்லாலே
நீ முன்னாலே நான் பின்னாலே
தில்லாலே தில்லாலே தில்லாலே தில்லாலே
நினைப்பவரைக் கார்த்திடுவாய்
ஏ குள்ளத்தாரா

---

பிளேட் நெ. 4364

பெய்யா மழை பெய்யு தாம்
பெரிய வெள்ளம் வருகுதாம்
மீனு நத்து போட்டு கிச்சாம்
மீனு புலாக்கு போட்டு கிச்சாம்
மீனு கம்மல் போட்டு கிச்சாம்
மீனு சாடு போட்டு கிச்சாம்

பெரிய பெரிய மீனு புடிச்சிக் கிச்சாம் அதில்
சந்திலே பொந்திலே வந்ததை
சமைத்து வைச்சேன் சட்டியிலே (பெ)

அதில்-சந்திலே ஒன்று திண்ணேன்
அந்த-பொந்திலே ஒன்று திண்ணேன்
தலையிருக்க வாலிருக்க
முண்டமெங்கே போச்சடி அந்த
முண்டமெங்கே போச்சுது அந்த
கண்டமெங்கே பேச்சுது
கன்னமிட்ட சோரனே அவனிட தீரனே
எந்தன் நடராஜனே இந்த சபையோர்களே
சின்ன சட்டிலே போட்டாலது
ஜினுக்கு தாளம் போடுதாம்
பெரிய சட்டிலே போட்டாலது
பெரிய தாளம் போடுதாம்
தள தள தள பள பள பள
பெரிய தாளம் போடுதாம் (பெ)

---

## பிளேட் நிர். 2775

ஆசையுன் பேரி லானேன்
அப்போதே கெட்டுப் போனேன்

மோசம் செய்யாதே யினிதான்
மோடி யேனை விட்டு விடேன் (ஆ)

நேசி நீயுகந் திடுவாய்
நீ ஆசை முத்தம் தந்திடுவாய்
வாசமே புரிந்திடுவாய்
காசியிலே முந்திடுவாய் (ஆ)

கண்ணே காதலியாளே
பெண்ணே ஆசை ஒயிலாளே
புண்ணானேன் நானு மிவ்வேளே
மண்ணில் பிடி யென் தோளே (ஆ)

ஓடியே வந்தேனே
தேடியே நொந்தேனே
மோடியேன் சேர்ந்தேனே
லேடியே பொன் தந்தேனே (ஆ)

காதலியாளே வாராய்
வேதனையை நீ தீராய்
வாதிடாமலே சேராய்
நீ தயங்காமல் வாராய்

---

பிளேட் நிர். 3106

இராகம-இந்து-பைரவி-ஆதி

காளி மகமாயி
கும்பிட்டேன் கூடவாடியிருக்க (கா)
காளி மகம்மாயி கும்பிட்டேன்
கூடவாடி எருக (கா)

காத்தடிக்கு தடி உடம்பெல்லாம்
வேத்துக்கொட்டு தடி (கா)

காத்தடிக்கு தடி புன்னை மரப்
பூத்திருக்கு தடி காளி ஆயி (கா)

நேத்துவந்தே னடி கதவெல்லாம்
சாத்திருந்த தடி (கா)

அஞ்சுபணந் தாண்டி அந்தசேலை
மஞ்சநிறந் தாண்டி (கா)

மாமரந் தாண்டி மருதை
கோபுரந் தாண்டி (கா)

---

ஆல் ரெடி ஆல் ரெடி சின்னமுத்தம்மா
ஜோல்ஜரை சைகைசெய்தாய் பெரியமுத்தம்மா (ஆ)

ஊணுறக்கம் உன்னால் விட்டேன் சின்ன முத்தம்மா
நானுமெத்த கோபக்காரி பெரிய முத்தமா (ஆ)

ஊட்டி வளர்த்தேனடி சபாரஞ்சிதம் உனை
ஊருமேலே விட்டனடி சபாரஞ்சிதம் (ஆ)

திட்டவேணும் கொட்டவேணும் மனோரஞ்சிதம்
சீக்கிரமாய் வந்திருவேன் மனோரஞ்சிதம் (ஆ)

கதவடைத்து நீயட்டி பமேல நீலம்மா
கண் சைகை காட்டாதடி பமேல நீலம்மா (ஆ)

சிங்கட்டிலோ நிலுஸ்தானு பில்லா பில்லா
சீக்கிரங்க ஒச்சிவெய்யி பில்லா பில்லா (ஆ)

முற்றிற்று.

உ

# புஸ்தக  விளம்பரம்.

| | | | |
|---|---|---|---|
| மதுரை பபூன் ஷண்முகம் பாடிவரும் புதியபிளேட் பபூன் பாட்டு 1, 2, பாகம் பாகம் 1-க்கு | 0 | 2 | 0 |
| S. V. சுப்பையா பாகவதர் பாடிவருகிற பூங்காவினேதை சிங்காரப் பாட்டு 1, 2, பாகம், 1-க்கு | 0 | 2 | 0 |
| ஷியார் இயற்றிய தேசீய கீதம் | 0 | 2 | 0 |
| ஷியார் இயற்றிய காங்கிரஸ் பாட்டுகள் | 0 | 2 | 0 |
| குணங்குடி மஸ்தான் சாகிபு பாடிய வேதாந்தக் கீர்த்தனை | 0 | 2 | 0 |
| நாட்டுத்திலகம் என்னும் ராட்டுப்பாட்டு | 0 | 5 | 0 |

மேல்கண்ட புஸ்தகங்களும், இன்னும் இதர புஸ்தகங்களும் மொத்தமாகவும், சில்லரையாகவும் வியாபாரிகளுக்கு சௌகரியமாயும் கீழ்கண்ட விலாசதாரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

**S. வீராசாமி நாயுடு,**

புக் ஷாப், புதுமண்டபம்,

மதுரை.